# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)




## கிறிஸ்துவின் வீட்டில் 'உள்ளே' பிரவேசிக்கும் இளைப்பாறுதல்!

**நா**ம் கிறிஸ்துவின் சொந்த வீடாய் இருப்பதற்கே தேவன் விரும்புகிறார்! அவர் தங்கும் நம் இருதயம் பெற்றிடும் பாக்கியமே "அவர் தரும் இளைப்பாறுதல்!"

அவருடைய இளைப்பாறுதலில் நிலைத்திருக்க, ஒவ்வொரு நாளும் அவருடைய வீட்டில் பிரவேசித்திட ஜாக்கிரதை கொண்டிருப்போமாக! இந்த இளைப்பாறுதலை விசுவாசித்து வாழ்வோர் அனைவரும் "ஜீவனுள்ள தேவனை" விட்டு விலக மாட்டார்கள்! அல்லது இளைப்பாறுதலை இழந்து, ஒருநாளும் தவித்திட மாட்டார்கள்! (எபி. 3:6,11,12).

*-tr*



## சமரசம் மறுத்து ஜெயித்திடும் சிலுவை கொடி!

சபை மாந்தரே கேளுங்கள்: "நம் சபைகளை சீயோன் பர்வதத்தில் கட்டுவோமாக! இந்த உலகத்தை துணிவுடன் ஏறிட்டு நின்று 'உலகமே! நாங்கள் நிற்கும் பர்வதம் ஏறி வாருங்கள்!' என்றே அழைப்பு கொடுப்போமாக! இதற்கு மாறாக 'எவ்வித கொடிய சூழ்நிலையிலும்' உலகத்திற்குள் நாம் இறங்கிவிடாதிருப்போமாக!" நம் கிறிஸ்தவத்தின் சிங்காரமே சிலுவைதான்:

அந்த சிலுவையின் முழக்கமோ, மரித்து வாழுங்கள்! பிரிந்து வாழுங்கள்! ஒருபோதும், **ஒருபோதும் ஒத்த வேஷத்திற்கு சமரசம் சேராதிருங்கள்!** என்ற முழக்கமேயாகும். சிலுவையைக் கண்டடைந்தவர்களில் ஒருவர்கூட, ஒத்த வேஷத்திற்கு தாழ்ந்தது இல்லை!!

மெய்யான சிலுவை, ஜீவனுக்கும் மரணத்திற்கும் உறுதியான பிளவை ஏற்படுத்தும். இதைக் காணும், பயந்து வாழும் கோழைகள் "இது அதிகபட்சம்!" எனக் கூக்குரலிடுகிறார்கள். கோழைகளின் இந்த கூக்குரல், மெய்யாகவே சரிதான். ஏனெனில், இந்த பாருலகில் 'சிலுவை மாத்திரமே' அதிகபட்சத்தின் உச்சக்கட்டம்! இதைத்தவிர வேறொன்றல்ல, சிலுவையே முடிவானது!

*-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு டிசம்பர் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A-Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

## அவரது அளவில்லா அக்கறை கண்டவன், கவலைப்படுவதில்லை!

*'தேவ ராஜ்ய முதலிடம்' மறுக்கப்படுவது, விசுவாச பின்னடைவு*

இன்று, விசுவாசிகளாகிய நம் யாவருக்கும் இயேசு வழங்கியிருக்கும் கட்டளையாதெனில் "*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குகூட கொடுக்கப்படும்*" (மத்.*6:33*) என்ற பிரதானமான வேத வாக்கியமேயாகும். இந்த கட்டளையின் பொருள் என்னவென்றால் "உங்கள் சிந்தைகளை எப்பொழுதும் 'திவ்ய நிலையில்' காத்துக்கொள்ளுங்கள். 'அப்பொழுது' தேவன் உங்கள் சரீர தேவைகள் அனைத்தையும் கவனித்து பொறுப்பெடுத்துக்கொள்வார்" என்பதேயாகும்.

இவ்வாறாக, தேவன் தன்னுடைய பிள்ளைகள் அனைவரையும் 'சாதாரண அன்றாட நிகழ்ச்சிகளின்' பிரச்சனையிலிருந்து விடுதலை செய்யவே விரும்புகிறார்! அதை இன்னும் நேரடியாகவே கொலோசெயர் *3:2*-ம் வசனத்தில் குறிப்பிட்டு "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" என கூறியுள்ளார். இதுபோன்ற மேலான வசனங்களுக்கு முன்பாக "பொருளாதார வசதிக்காக நாடி ஓடும்" கிறிஸ்தவர்களை தேவன் தூரத்தில் வைத்து, அவர்களை நிறுத்தி விடுகிறார்!

> *"**மு**தலாவது" என்ற வார்த்தையின் பூர்வீக வேத விளக்கம் என்னவென்றால் "வேறு எதைக்காட்டிலும் முதன்மையில் வைத்திருக்கும் ஸ்தானம்" என்றே விளக்கம் தருகிறது. ஆகவே, 'தேவனுடைய ராஜ்யத்தை முதலாவது தேடுவதே' வாழ்க்கையின் எந்த முக்கியத்துவதைக் காட்டிலும் முதல் பகுதியாய் இருந்திட வேண்டும்! இந்நிலை வந்தவர்கள் மாத்திரமே 'தேவனுடைய அரசாளுகையை' எல்லா படைப்பிற்கும் மேலாய் உயர்த்தி வைத்திருப்பார்கள். அது போன்ற உயர்ந்த நிலையை பெற்றவர்கள் 'கிறிஸ்துவின் அரசாட்சி' தங்கள் சொந்த ஜீவியத்தில் "பரிசுத்தாவியின் மூலமாய் உண்டாகும் நீதி, சமாதானம், சந்தோஷம்" தங்கள் வாழ்க்கையில் வெளிப்பட ஆசையாய் இருப்பார்கள் (ரோமர்14:17).*

உங்கள் ஜீவியத்தில் காணப்படும் இதுபோன்ற நற்குணமே, 'கவலைக்கு பதிலாக தோன்றுகிறபடியால்' இந்த உலகம் அதை உங்களில் தெளிவாய் காணும்! ஆம், **உங்களிடத்தில் தேவனுடைய ராஜ்யம் இருப்பதை** இந்த உலகம் திட்டவட்டமாய் அறிந்துகொள்ளும்!

இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையாய் இருப்பதால், அதற்கு மாறாக "கவலையும் பீதியும் உங்களிடத்தில் இருப்பதை கண்டுகொண்ட பொது மக்களிடம், அவர்கள் இரட்சிக்கப்படும்படி நான் இயேசுவை அவர்களிடத்தில் சொல்லுவேன்" என நீங்கள் கூறும்போது, அந்த பொது ஜனங்கள் உங்களை நம்ப மாட்டார்கள்! மேலும், உங்கள் போலியான ஜீவியத்தை கண்டிப்பாய் கேள்வி கேட்பார்கள். நீங்களே உங்கள் அரைகுறையான ஜீவியத்தை அறிந்திருப்பீர்கள்!

> "
> **முகாந்திரமற்ற கவலையினால் நீங்கள் ஆட்கொள்ளப்பட்டிருப்பது உங்களுக்கே தெரியும். அப்படியிருக்க 'மற்றவர்களுக்கு நற்செய்தி சொல்வது' உங்களால் எப்படி முடியும்?**

'ஜே.ஆதம்ஸ்' என்ற பக்தன் நடைமுறையான விடுதலை ஜீவியத்தை ஞானமாய் எழுதியுள்ளார், அது என்னவெனில்:

*உங்கள் பிரச்சனை, பயமோ அல்லது வேறு எந்த பாவமாயிருந்தாலும் "நீங்கள் **முதலாவது** தேவனைப் பிரியப்படுத்தவே" கர்த்தர் விரும்புகிறார்! உங்கள் ஜீவிய தோல்வியெல்லாம் **இரண்டாவது** இடமேயாகும்! ஆகவேதான் 'பயத்தைவிட குறைவான கவலையை' நீங்கள் ஜெயித்திட வேண்டியதை இயேசு குறிப்பிடும் போது "நீங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" என்றே கட்டளையிட்டுள்ளார்! (மத்.6:33). அதற்குப் பதிலாக, நீங்கள் வெறுக்கும் பயத்தையோ அல்லது வேறு பாவத்தையோ முதலாவதாய் வைத்தால் கூட, நீங்கள் எதையும் பெற்றுக்கொள்ள இயலாது! "பயத்திலிருந்து விடுதலையாக வேண்டும்" என்ற நியாயமான பகுதியை முதலாவதாக வைத்து 'தேவனை இரண்டாவது ஸ்தானத்தில்' வைப்பதை கர்த்தர் நிச்சயமாய் விரும்பமாட்டார். உங்கள் கவலையின் ஜீவியம் உங்களிடம் அப்படியேதான் இருக்கும்!*

உங்களின் இருதயம், எதை நாடி நிறைந்திருக்கிறது? தேவனுடைய ராஜ்யமே உங்களின் மேலான நாட்டமா? அல்லது இந்த லோக 'உலகப்பொருட்களின்' நாட்டமா? நம்மைச் சுற்றியுள்ள இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் "இந்த உலகத்தின் கவர்ச்சியே" பிரதான சோதனை காலமாயிருக்கிறது! ரஷ்ய நாடக ஆசிரியர்

*'அன்டன்செக்கோயுவ்'* தான் எழுதிய **"போட்டி பரிசு"** என்ற நாடகத்தின் முடிவுரையில் வரும் ஓர் ஏழை, தான் ஜெயித்த 100-கிலோ தங்கத்தை போட்டியாளரிடம் வாங்க மறுத்து, அந்த நாடகத்தின் கடைசி வரியாய் அவர் கூறியது என்னவென்றால் "கிறிஸ்தவர்களாகிய உங்களைக் கண்டு ஆச்சரியமடைகிறேன்: உங்களால் எப்படி தவறான பாதை செல்ல முடிந்தது? சத்தியத்தை அகற்றி பொய்யை ஏற்றுக்கொண்டது ஏன்? உங்கள் 'போட்டி பரிசை' வெறுக்கிறேன்! எனக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருப்பதெல்லாம் **பரலோக மேன்மைக்கு பதிலாக, மண்ணுக்குரியவைகளை நீங்கள் லாபமாய் ஏற்றுக்கொண்டது** எனக்கு சொல்லி முடியாத ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தருகிறது. பந்தயத்தில் எனக்குமுன் கொட்டிக் கிடக்கும் 100 கிலோ தங்கத்தை நான் அசட்டை செய்து புறக்கணிக்கிறேன்" என்ற சவாலோடு அந்த நாடகத்தை முடித்தார்!

அந்த ரஷ்ய நாடக ஆசிரியர் கூறியதை வைத்து சிறந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்! ஆகிலும், முற்றும் துறந்தவர்களைப்போல் 'எல்லாவற்றையும் கொட்டிவிட வேண்டும்' என ஒரு சார்பாக எண்ணத் தேவையில்லை. ஏனெனில் "கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்! உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்!" என்றல்லவா வேதம் கூறுகிறது (சங்.84:11). ஆகவே இனி இந்த உலகப்பொருட்களுக்காகவோ அல்லது வேறு எதற்காகவோ நீங்கள் கவலைப்படுவதை நிறுத்திவிடுங்கள்! *ஷெரலாக் ஹோம்ஸ்* என்ற கிறிஸ்தவ நாவலாசிரியர் வலியுறுத்தி கூறுகிறபடி இயற்கை படைப்புகளை "வெறும் பார்ப்பதல்ல, **உற்றுநோக்கிப் பாருங்கள்**". அவ்வாறாகவே நம் ஜீவியத்திற்குரிய அனைத்தையும் உற்றுநோக்கிப் பார்த்திட இயேசு அழைப்புக் கொடுத்தார்! அவ்வாறு நீங்கள் பார்ப்பவராயிருந்தால், தேவன் தனக்குப் பிரியமானவர்கள் மீது எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை, நீங்கள் ஏராளம் கண்டுகொள்ள முடியும்! ஆமென்.

- ஜான் மேக் ஆர்தர்

---

## 'என் வீட்டு வாழ்க்கையை' ஒரு ஆலயம்போல் வாழ்ந்தேன்!

*'ஆவியானவரின் உந்துதலை' பெரிதென மதித்தேன்*

என் வீட்டில், யாருக்காவது என்னிமித்தம் மனவருத்தம் தோன்றினால், அவர்களிடம் பணிவுடன் மன்னிப்பு கேட்பதை தெய்வ பழக்கமாய் கற்றுக்கொண்டேன். இதனிமித்தமாய், என் கோபமும், என் பெருமையும் ஒடுக்கப்பட்டதை நான் கண்டேன்! கோபம், பெருமையின் குமாரத்தி! என வேதம் கூறுவதை நான் மறப்பதில்லை!

“ **மெய்யான மனத்தாழ்மை பெற்ற ஒருவன், யாதொன்றும் தன் ஜீவியத்தில் 'கோபாவேசம்' ஏற்படுத்திட அனுமதிக்கவேமாட்டான்!**

*சுபாவமாகவே 'சாந்தமாயும் அமைதியாயும்' இருப்பவர்கள், தாங்கள் விசுவாசிகளாய் மாறியதும் 'தங்கள் இயல்பான சுபாவத்தை வைத்து' தாங்கள் எல்லாம் அடைந்துவிட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள்! இது ஒரு சாதாரண தவறல்ல, மிகப்பெரிய தவறாகும்!*

*ஆம், ஜென்மமான தங்களின் 'சில நல்ல சுபாவத்தைக் கொண்டு' தங்களை சாந்த சொரூபிகளாக எண்ணிக் கொண்டார்கள். ஏனெனில், இவர்களிடம் குடிகொண்டிருக்கும் உண்மையான சுபாவம் தாக்கப்படாதபடியால் அப்படி எண்ணிக்கொள்கிறார்கள்! இப்படிப்பட்டவர்களிடத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம், மெய்யான பலன் தர இயலாது!*

“ **'சோதிக்கப்படாத எந்த நல்லதாய் தோன்றும்' சுபாவமும் போலியானது என திட்டவட்டமாய் கூறலாம்! தங்களுக்கு தாக்குதல் வராதவரை "தங்களைப் பரிசுத்தவான்களாகக் கூட" எண்ணிக்கொள்ளும் நபர்கள் ஏராளம் உண்டு!**

*துன்பம் அவர்களைத் தீண்டும் நேரத்தில், விதவிதமான தீமைகள் அவர்களிடம் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படத் துவங்குகிறது. மெய்யாய் மரிக்காமல், இறந்தது போல் கிடந்தவர்களை 'உசுப்பிவிட' யாதும் சம்பவிக்காதபடியால், 'தன் நிலை உணராமல்' அப்படியே கிடக்கிறார்கள்! ஆனால், என்று அவர்கள் உசுப்பப்பட்டார்களோ 'அன்றுதான்' இவர்கள் மெய்யாய் மரிக்கவில்லை என்ற உண்மை அவர்களுக்கு வெளியரங்கமாகிறது, மற்றவர்களுக்கும் வெளியரங்கமாகும்!*

*நானோ, என் நடைமுறை ஜீவியத்திற்கு வேதவாக்கியத்தையும், ஜெபத்தையும் உறுதியாய் பற்றிக்கொண்டு* **சுவிசேஷ ஊழியங்களும் செய்தேன்!** *என்னிடத்தில் உள்ளவைகளை ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று கொடுத்தேன்! அவர்களுக்கு இறைவார்த்தைகளைக் கூறிப் போதித்துவந்தேன்! என் பெற்றோர்கள் என்னோடு சாப்பிடும்போது அவர்களை அன்புகூர்ந்து, நானே பரிமாறுவேன்! கர்த்தர் என்னோடு பேசியதை அவர்களிடம் பேசுவேன்!*

*அந்நாட்களில்* **புனித பிரான்ஸிஸ் தி சாலஸ்** *மற்றும்* **மேடம் தி சேண்டல்** *ஆகியோர்களின் ஜீவியத்தையும் ஊழியத்தையும் மனதுவைத்து படித்தேன். நல்ல ஜெப வாழ்க்கையை எனது கத்தோலிக்க பாதிரிமார்கள் கற்றுத்தரவில்லை.* **என்னுள் வாசம் செய்த தேவ ஆவியின்**

**உந்துதலே** தேவனை கிட்டிச்சேர வைத்தது.

மெய்யாகவே ஆவியில் விழிப்படைந்து ஜெபிப்பது ஒரு பாக்கியம்! நான் தேவனிடம் சென்று "அன்புள்ள தேவனே, வேறு யாதொரு வரத்தையும் உம்மிடம் நாடி கேட்கவில்லை.... **உம்மை அண்டிவரும் ஜெபவரமே எனக்குத் தாருமையா!**" என்றே வேண்டி நின்றேன். நான் விரும்பிய உச்சிதமான ஜீவியம் *மேடம் தி சாண்டல்* வாழ்க்கையில் இருந்ததைக் கண்டு என் வாஞ்சை இன்னும் அதிகரித்தது!

இதுபோன்ற கால சூழ்நிலையில், என் இளமை காலத்தில் ஒரு கன்னியாஸ்திரீயாக நான் மாறிடவே என் எண்ணங்கள் செயல்பட்டது. அது ஏனெனில் நான் ஆர்வமுடன் படித்த புனித பெண்மணியாகிய *பிரான்ஸிஸ் தி சாலஸ்* அவர்கள், ஆழ்ந்த பக்தி கொண்ட கன்னியாஸ்திரீயாக வாழ்ந்தவர்கள்! உண்மைதான், வேறு எதன் மீதும் எனது நாட்டம் செல்லவில்லை. நான் அடிக்கடி கான்வெண்டிற்கு சென்று '**என்னை கன்னியாஸ்திரீயாக ஏற்றுக்கொள்ளுங்கள்**' என வலியுறுத்திக் கேட்டேன். என் தந்தையையும், அவர்கள் என் மீது கொண்டுள்ள அளவு கடந்த பாசத்தையும் கான்வெண்ட் மக்கள் அறிந்திருந்தபடியால், என் வேண்டுகோளை அவர்கள் ஏற்கவில்லை! கர்த்தருடைய நேரத்திற்காக காத்திருக்கப் பழகிய நான், தகுந்த காலத்திற்காக நான் மிகுந்த இளைப்பாறுதலுடன் வாழ்ந்தேன்!

- மேடம் குயான்

---

## அவரோடு பயணித்தவர்களுக்கு "பாடுகளின் இரகசியம்" புரியும்!

*'பாடுகள்' கிறிஸ்தவ ஜீவியத்தின் முழுமை*

அவர் கெத்செமனே என்ற இடத்துக்கு வந்தபோது, தமது சீஷரில் எட்டுப்பேரைத் தோட்டத்தின் வாசலில் உட்கார்ந்திருக்கச் சொல்லி, மற்ற மூவரையும் தம்மோடுகூடத் தோட்டத்துக்குள்அழைத்துச் சென்றார். பேதுரு, யாக்கோபு, யோவானாகிய இம்மூவரும் இதற்கு முன்பு *யவீரின்* மகளை உயிரோடெழுப்பினபோதும், அவர் மறுரூபமானபோதும், அவரோடு கூடயிருக்கும் சிலாக்கியம் பெற்றிருந்தார்கள்.

" **அவர் படும் அகோரபாடுகளைப் பார்க்கத்தக்க விசுவாச பலம் எட்டுப் பேருக்கு இல்லாமையால், அவர்களைத் தூரத்தில் வைத்தார்!**

மற்ற மூவரும் தன்னை கிட்டிச் சேர்ந்து அறிந்திருந்தபடியால், தமக்கு நேரிடும் இந்தக்கொடிய போராட்டத்தால் இடறலடைய மாட்டார்களென்றெண்ணி அவர்களை மாத்திரம் தோட்டத்திற்குள்

*அழைத்துப்போனார். 'அப்படியிருந்தும்' அவர்களைத் தம்மோடு கூடியிருக்க இடந்தராமல்,* **அவர் ஒண்டியாய் ஆலையை மிதிக்க** *வேண்டுமேயன்றி, மனுப்புத்திரரில் ஒருவரும் கூடயிருப்பது அவசியமில்லை. அவருடைய அகோரபாடுகளின் இரகசியமாகிய* **திரைக்குள் பிரவேசிக்க** *அவ்வேளையில் அவர்களுக்கு இடமில்லை. ஆகையால் அவருக்கும் அவர்களுக்கும் இடையில் கல்லெறிதூரம் இருக்கவேண்டும். தாம் ஒண்டியாய் அவஸ்தைப்படும் இவ்வேளையில் அவர்கள் தம்மோடுகூட விழித்திருப்பது தமக்கு ஆறுதலாயிருக்கும் என்றே நினைத்தார். அவர்களோ தங்களைப் போர்வையால் மூடிக்கொண்டு தூங்கினார்கள். தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தார், ஒருவரையும் காணோம்! தாம் படுங்கஷ்டத்தை மறந்து, அவரே மும்முறை அவர்களிடம் வந்து அவர்களைத் தேற்ற வேண்டியதாயிற்று!!*

*தோட்டத்துக்கு வெளியிலிருந்த எட்டுப்பேரோடு திகைத்து உட்கார்ந்துகொண்டிருப்பது நமது வேலையல்ல. அல்லது கல்லெறி தூரத்தில் அம்மூவரோடு சேர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதும் நமது வேலையல்ல!*

> ***கி**ருபையுள்ள இரட்சகர் தமது பாடுகளின் இரகசியமாகிய திரையைக் கிழித்து, நம்மைத் தம்மண்டை அழைக்கிறார்! அவருடைய அவஸ்தையைக் கண்டு நாம் இடறலடைவோம் என்கிற பயம் ஆண்டவருக்கில்லை! அந்தக்காலம் கடந்தது, சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும்* **ஆவியானவர் இப்போது** *வந்திருக்கிறார். தேவகுமாரன் படும் அவஸ்தையை உனக்கும் காண்பிக்கிறேன் வாவென்று அவர் நம்மை அழைக்கிறார். அவரே கிறிஸ்துவின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்த வந்தவர். மிகுந்த பயபக்தியுடன் தோட்டத்துக்குள் பிரவேசிப்போம். பணிந்த சிந்தையுடன் அவர் பாடுகளை நோக்குவோம்! அன்றிரவு அவரடைந்த பயங்கரமான போராட்டத்தைப்போல் அதற்குமுன் அவருக்குச் சம்பவித்ததில்லை. அவரே நமக்குப் போதித்தாலுங்கூட பாடுகளின் இரகசியத்தைப் பூரணமாய் அறிந்துகொள்ள நமது புத்திபோதாது! உணர்ந்துகொள்ள நமது அனுபவம் காணாது!*

*இந்த இரகசியத்தை விளக்கிக்காட்டத் துணிந்து, சத்தியத்தை இருட்டாக்கினவர்கள் பலர்! சுய அபிப்பிராயங்களைச் சொல்லி உண்மையைக் கெடுத்தவர் பலர்!* **தேவன் மாம்சத்தில் வந்தது எப்படி இரகசியமோ, அதுபோலவே அவரது ஜீவிய முழுவதும் இரகசியமே!** *அவரே இரகசிய புருஷனாயிருக்கும்போது அவருடைய காரியங்களும் இரகசியமாகத்தான் இருக்க வேண்டும். அவருடைய விஷயத்தில்*

நாம் அறிந்து கொள்ளக்கூடிய காரியங்கள் இருப்பதுபோலவே, நாம் அறியக்கூடாத இரகசியங்களும் உண்டு. அவற்றுள் கெத்செமனே ஒன்று! நாம் அறியக்கூடியதும் அறியக்கூடாததுமான பாடுகள் ஆண்டவருக்கு நேரிட்டதென்பது திருச்சபை எக்காலத்திலும் ஒப்புக்கொண்ட விஷயம். 'ஆவியானவரின் உதவியால்' எவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவுதான் நாம் அறியக்கூடும்.

கெத்சமனேயில் அவர் பட்டபாடுகளின் இரகசியத்தை சீஷர்கள் அன்றிரவு அறிந்துகொள்ளவில்லை. ஏனென்றால் இதுவரை ஒருக்காலும் அவர்கள் காணாததும், அறியாததுமான போராட்டத்தை அங்கே அவரில் கண்டார்கள். இதுவரை எஜமானுடைய மகத்துவ செயலை அறிந்த அவர்களுக்கு, அவர்பட்ட அகோர அவஸ்தை ஆச்சரியமாயிருந்தது! அதற்கு காரணமென்னவென்று அவர்கள் அறிந்துகொள்ளக்கூடவில்லை. அவருடைய ஜீவியத்தைப் பிந்தி அவர்கள் எழுதின காலத்தில், அவர் சகித்த அவஸ்தையை விவரித்துச் சொல்லக்கூடாமல், புதிய கிரேக்க வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள். அவைகள் மனுஷருக்குள் காணப்படும் அவஸ்தையை விவரிக்கும் வார்த்தைகள் அல்ல. ஒருவன் தனக்குத் தெளிவாய் தெரிந்ததை மாத்திரமே விபரமாய் சொல்லக்கூடும்.

> “**ஆகையால் ஆண்டவர் பட்ட அவஸ்தையை வாக்குக்கெட்டாத போராட்டமெனலாம். அவருடைய பாடுகளின் இரகசியத்தை அறிந்திட காலம் பிடிக்கும்! ஆவியானவரின் போதனை அருளப்பட வேண்டும்! அவைகளை, அவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அனுபவத்தால் மாத்திரமே கண்டறிய வேண்டும்!**

இன்றைய திரளான விசுவாசிகளிடம் 'கிறிஸ்துவைப் பற்றிய அனுதாப ஐக்கியமின்றி' அனுபவமில்லை! ஒரு தாய் தன் பிள்ளையின் வேதனையை தனக்குள் அனுபவிப்பதுபோல, ஒரு அந்நிய ஸ்திரீ அறியாள்! கிறிஸ்துவின் சிந்தைக்கொப்பானவர்களே, அவருடைய பாடுகளின் இரகசியத்தை அறிகிறார்கள். ஆவியானவரால் போதிக்கப்பட்ட பரிசுத்தவான்களுடைய நீண்டகால அனுபவம் நமக்குக் கிடைத்திருப்பதுபோல, அன்றிரவு அம்மூவருக்குக் கிடைக்கவில்லை. தேவன் தமது இரகசியங்களைப் படிப்படியாகவே வெளிப்படுத்துகிறார்! நாம் ஆவிக்குரிய தகுதியில் வளருகிறதற்குத்தக்கதாக, அவருடைய இரகசியங்கள் நமக்குள் வெளிப்படுத்தப்பட்டு அறிகிறோம்! அல்லேலூயா.

- பரமானந்தம் ஐயர்

## கிறிஸ்தவனுக்கு ‘தன் சொந்த ஜீவியத்தையே’ தந்துள்ளார்!

*‘உயர்ந்த தரத்தை’ நமக்கு அருளிய இயேசு*

ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் ஆயத்தம் செய்து வைத்திருக்கும் ஜீவியத்தின் முதல்பகுதி என்னவென்றால்: “அவன், இந்த உலகத்திற்காக தாகம் கொண்டிருக்க மாட்டான்!” என்பதுதான். உலகத்தை மறுத்தவன், பாவத்தை விட்டு விலகி வாழ்வதால் ‘அதுவே’ அவனுக்கு பாவத்தின்மீது கொண்ட ஜெயமாய் மாறுகிறது! இதன் விளைவாய் ஏற்படும் பரிசுத்தமே வலிமை கொண்டதாயும்! ஜெயம் கொண்டதாயும்! விளங்குகிறது. தேவனைப் பற்றியிருக்கும் இவ்வித ஜீவியம் 1) தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதையும் 2) எந்த இடையூறையும் அனுமதிக்காமல், தேவனோடு ஐக்கியப்படுவதையும் கண்டடைந்திருக்கும்!

*ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், ஓர் சிறந்த ஜீவியமாய் இருப்பதெல்லாம் “ஜீவ காலமெல்லாம் அவன் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்” என்பதுதான். இதுபோன்ற ஜீவியமே ‘முழுமையான சமாதானம் கொண்டதாய்’ இருந்திட முடியும்! அதுஏனென்றால், ‘தெய்வ சமாதானமே’ தேவனோடு ஐக்கியப்படுவதற்கு யாதொரு தடையும் வைத்திருப்பதில்லை! தேவனுடைய ஐக்கியத்தைப் பெற்றவன் ‘தேவனுடைய சித்தத்திற்கு’ விரோதமாய் நிற்பதில்லை! இவ்வித மனரம்மியமான ஜீவியத்தையே, வேத வாக்கியங்கள் மூலமாய் தேவன் நமக்கு அருளிச்செய்திருக்கிறார்.*

‘கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கும்’ தெய்வ வாழ்க்கையை, நமக்கென்று தேவன் வழங்கியிருக்கிறார். இவ்வித விலையேறப்பெற்ற வாழ்க்கையை யாதொன்றும் பாதிக்கவோ அல்லது அசைத்திடவோ முடியாது! எப்படியெனில், கிறிஸ்து அசைக்கப்படுவதில்லை, ஆகவே நாமும் அசைக்கப்படுவதில்லை. கிறிஸ்துவின் ஜீவியம், ஓர் தியான வாழ்க்கை! அதுபோலவே, நம்முடைய ஜீவியமும் ‘தியான வாழ்க்கையாய்’ இருந்திட வேண்டும். இன்று நமக்கு அருளப்பட்ட சிலாக்கியம் என்னவென்றால் “கிறிஸ்து தேவனுக்கு முன்பாக நிற்பதைப் போலவே” நாமும் தேவனுக்கு முன்பாக நிற்க முடியும் என்பதுதான்!

> “ **இவ்வாறெல்லாம் சத்தியம் இருக்கிறபடியால், இனியும் நம்மை “பெலஹீனர்களாகவும், தோல்வியுற்றவர்களாகவும் எண்ணிக் கொண்டு” வாழ்வது நியாமல்ல. ஒரு கிறிஸ்தவனுக்கு இதுபோன்ற ‘பெலஹீன சிந்தை ஏற்படுவதற்கு’ எந்தவித முகாந்திரமும் வேதப்புத்தகத்தில் குறிப்பிடப்படவேயில்லை!**

*கொலோசெயர் 3:4-ம் வசனம் கெம்பீரமாய் கூறுவதைப் பாருங்கள். "கிறிஸ்து நம்முடைய ஜீவன்" என்றல்லவா கூறுகிறது! நம் கிறிஸ்து, எல்லாவற்றிற்கும் மேலானவர். அவரை எவ்விதத்திலும் ஒருவன் தடை செய்யவோ அல்லது தீங்கு செய்யவோ இயலாது. ஏனெனில் "கிறிஸ்துவே நமது ஜீவனாயிருக்கிறார்" என்ற சத்தியமேயாகும்!*

*மெய்யாகவே, ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் நியமனம் செய்து வைத்திருக்கும் ஜீவியம் பூரண சமாதானமும்! பூரண மகிழ்ச்சியும்! நிறைந்ததாய் இருக்கிறது! ஆகவேதான், அவனுடைய ஜீவ கால வாழ்க்கை முழுவதும் தேவசித்தமும்! ஊழிய சுறுசுறுப்பும்! வல்லமை நிறைந்ததுமாய்! இருக்கிறது. இவ்வளவு நேர்த்தியாய் தேவன் நியமனம் செய்த வாழ்க்கையை நாம் வாழாதிருந்தால்,* **பின்தங்கிய அவ்வித நிலையை எதிர்த்து வீறுகொண்டு நிற்போமாக!** *நாம் உடனடியாக, நம் ஜீவிய அனுபவத்தை சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கக்கடவோம்.* **'இது'** *நம் வாழ்க்கையின் முக்கிய காரியம் என்பதை அறிந்து, நம்மைத் தாழ்த்தி, நம் தோல்விகளை தேவனுக்கு முன்பாக வைத்திடுவோமாக! நீங்கள் அப்படிச் செய்யக் கூடுமானால், தேவன் தம் அளவில்லா கிருபையை நிச்சயமாய் உங்களுக்கும் தந்தருளி, உங்களை அந்த உன்னத வாழ்க்கைக்கு மீட்டுக்கொள்வார்!*

> **"**
> **இவ்வாறு, நமக்கென்று கிறிஸ்து இயேசுவுக்குள் ஓர் உயர்ந்த தரத்தை தேவன் ஏற்படுத்தியிருக்க, நாம் இன்னமும் பாவ பிரமாணத்துக்குள் முடங்கி வாழ்ந்திடக்கூடாது!**

*நம் எல்லோருக்குமே "நன்மை செய்ய வேண்டிய விருப்பம் இருக்கிறது! ஆனால், நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை!" (ரோமர் 7:18) என்ற நிலையே காணப்படுகிறது. தேவன் நமக்கு உயர்ந்த வாழ்க்கையை வழங்கியிருக்கும்போது, நமது அறியாமை நிமித்தம், இனியும் நாம் தோல்விக்குள் தேங்கி நின்றுவிடக் கூடாது!*

*நான் இங்கே குறிப்பிடும் தோல்வி, ஓர் மெய் கிறிஸ்தவன் சந்திக்க நேரிடும் ஆவிக்குரிய தோல்வியைப் பற்றியதேயாகும்:*

*பெருமை ஆவிக்குரிய பாவம்! பொறாமை ஆவிக்குரிய பாவம்!*

*அவிசுவாசம் ஆவிக்குரிய பாவம்! 'பிறர் பிழை உற்று நோக்குதல்' ஆவிக்குரிய பாவம்! 'ஜெப குறைவு' ஆவிக்குரிய பாவம்! 'தேவனை சந்தேகித்தல்' ஆவிக்குரிய பாவம்! அர்ப்பணத்தில் பின்வாங்குவது, ஆவிக்குரிய பாவம்....*

*இவ்வித ஆவிக்குரிய விஷயங்களில் ஜெயம் பெற்றவர்கள் சிலர் மாத்திரமே! ஆனால், இவ்விஷயங்களில் தோல்வி அடைந்தவர்களே*

*ஏராளம் இருக்கிறார்கள். ஆவிக்குரிய பாவங்கள் பல ரூபங்கள் கொண்டவை. உதாரணமாய், பெருமை! பெருமை கொண்ட ஒருவன்: 1) தன்னைவிட மற்றவர் மேன்மையாய் இருப்பதை காண சகிக்க மாட்டான். 2) அது ஆவிக்குரிய விஷயத்தில் மாத்திரம் அல்ல, 'உலக காரியங்களில்' ஒருவன் மேன்மையாய் வருவதைக் காண்பது கூட அவனால் சகித்திட முடியாது. 3) இவ்வித பெருமை கொண்ட ஒருவன், தான் சகிக்க முடியாத அந்த மேன்மை பெற்றவனை 'எப்படியாவது குறை கண்டு' தள்ளி விடுவதற்கு எதையும் செய்திடத் துணிவான். 4) பெருமை கொண்டு வரும் வீழ்ச்சி, ஆவிக்குரிய ஜீவியம் மாத்திரம் அல்லாமல் 'கர்த்தருடைய ஊழியத்திலும்' பாதிப்பை கொண்டுவர துடித்து நிற்பான்!*

இவ்வாறாகவே, ஒவ்வொரு ஆவிக்குரிய பாவத்திற்கும் பல்வேறு ரூபங்கள் உண்டு. பொறாமைக்கு பல ரூபங்கள் உண்டு.... அவிசுவாசத்திற்கு பல ரூபங்கள் உண்டு..... இவ்வாறாகவே தேவன் ஆவிக்குரிய பாவங்களை நம்மில் வகையறுத்துப் பார்க்கிறார்!

**"இவ்வித குறிப்பிட்ட ஆவிக்குரிய பாவங்கள், ஒருநாள் வெடித்து சிதறும்போது, அது அவனுக்குள் பேரழிவை கொண்டுவந்து விடுகிறது!**

*அனைத்திற்கும் காரணம், அந்த கிறிஸ்தவன் 'அவன் அவனாகவே' வாழ்ந்த பரிதாபம்தான்! இவர்களுடைய வாழ்வில் 'தேவனோடு ஐக்கியம் கொண்டு ஜீவிப்பது' ஒழுங்கும் கிரமுமாய் இருப்பதில்லை! உண்மைதான், தெய்வ உறவு ஒன்றே 'கிறிஸ்துவின் ஜீவியத்தை' நமக்கு கொண்டு வந்து தரமுடியும்!*

ஆனால் வீழ்ச்சியடையும் இவர்களோ, தங்கள் நாட்களை ஜெபிக்காமலும் வேதம் வாசிக்காமலும் வாழ்ந்து வருகிறார்கள். இதனிமித்தமே, அவர்கள் தேவனுடைய முகத்தை காணமுடியாமலும் அவருடைய ஐக்கியத்தைப் பெறாதவர்களாயும் தவித்து நிற்கிறார்கள். கிறிஸ்தவர்களின் இவ்வித ஆவிக்குரிய வீழ்ச்சி "தேவன் இல்லாத ஜீவியம்" என கூறுவதைத் தவிர, வேறு ஒன்றும் இல்லை!

*- வாட்ச்மென் நீ*

---

## 'கிறிஸ்துவே சத்தியம்' நம் ஜெயத்தின் இரகசியம்!

*அவரை அறியாதவன், சத்தியம் அறியாதவன்*

ஒரு போதகர் என்பதைவிட, கிறிஸ்து மேலானவர்! நிக்கொதேமு கூறும்போது "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" எனக் கூறினார் (யோவான் 3:2). ஆனால் கிறிஸ்துவோ, போதகத்தைவிட மேன்மையான 'தேவனுடைய

*சத்தியமாய்' விளங்கினார். சகல சத்தியமும் அவருக்குள் உறைவிடமாய் இருந்தது! சகல ஞானத்தின் இரகசியங்களும்! சகல அறிவின் இரகசியங்களும்! அவருக்குள் மறைந்திருந்தது. "இயேசு கிறிஸ்து" என்ற ஒரு நபரில் நாம் சகல சத்தியங்களையும் முழுமையாய் அறிந்துகொள்கிறோம். ஆகவேதான், சத்திய ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும்போது, 'கிறிஸ்துவுக்குள்ளிருந்தே எடுத்து நமக்கு வெளிப்படுத்துகிறார்' என்பதே அல்லாமல் வேறில்லை! மெய்யாகவே ஒருவன் கிறிஸ்துவை அறிந்திருந்தால், அவன் சத்தியத்தையும் அறிந்திருப்பான். அவ்வாறு அறிந்து கொள்வதே, அவரைப்பற்றிய முழுமையானதாகும்!*

> "**நீங்கள் கிறிஸ்துவை மிக நெருக்கமாய் அறிந்திருந்தால், நீங்கள் யாதொன்றும் தெரியாதவராயிருந்தாலும் சத்தியத்தை அறிந்து கொள்வீர்கள்! 'அந்த சத்தியமே' உங்களை விடுதலையாக்கிட முடியும்!**

*நீங்கள் சத்தியத்தை மெய்யாகவே நேசிப்பவராயிருந்தால், ஒருவன் தேவனுக்குப் பிள்ளையாய் இருப்பதற்கொப்பாகவே 'சத்தியத்திற்கும் பிள்ளையாய்' மாறுவான். நாட்கள் செல்லச் செல்ல, அவன் கிறிஸ்துவை நெருங்கி வாழ்கிறபடியால் 'சத்தியம் இன்னதென்பதை அறிந்து' அந்த சத்தியத்தை உறுதிபட கூறுவான். இதை இயேசு குறிப்பிட்டு "சத்தியத்தை சார்ந்து நிற்கிற எவனும் என் சத்தம் கேட்கிறான்" என தெளிவாய் கூறினார் (யோவான் 18:37).*

*கிறிஸ்துவை சத்தியமாய் அறிந்து கொள்வதற்கும், அவரைப் பற்றிய சத்தியங்களை அறிந்து கொள்வதற்கும் இடையில் மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது. 1) 'அவரைப்பற்றிய சத்தியங்களால்' நாம் இரட்சிக்கப்படவில்லை! மாறாக, சத்தியமாகிய அவராலேதான் நாம் இரட்சிக்கப்பட்டோம். 2) 'இயேசு மரித்தார்' என்ற சத்தியம் நம்மை விடுதலையாக்கவில்லை! மாறாக, நமக்காக மரித்து இன்றும் தேவனோடு ஜீவித்திடும் 'தெய்வீக நபராலே' நாம் இரட்சிக்கப்பட்டோம்! 3) 'இயேசுவை கல்லறையில் வைத்த' சத்தியத்தாலே அல்ல, எனக்காக கல்லறையில் வைக்கப்பட 'உன்னத மனிதராலே' நாம் இரட்சிக்கப்பட்டோம்! 4) "அவர் உயிர்த்தெழுந்து பரமேறினார்" என்ற சரித்திர பூர்வ சத்தியத்தினாலே அல்ல, அவர் நம்மைப்போல் ஒருவராய் பிறந்து, பரம பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்த கிறிஸ்துவாலே இரட்சிக்கப்பட்டோம்! இவ்வாறாக,* **அவர் தேடி சம்பாதித்து வைத்த அந்த ஜெயமே "என் அன்றாட வாழ்க்கையின் போராட்டத்திற்கு" உதவிடும் ஜெயமாய்** *நிலைநிற்கிறது! இதுவே,*

நம்மை விசுவாசத்தினாலே மெய்யாகவே 'முற்றிலும் இரட்சிக்கும்' அடிப்படையாய் இருக்கிறது. பொதுவாக, நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும்! ஆனால் நிரூபிக்கப்பட்ட இந்த சரித்திர உண்மைகளால் நம் ஆத்துமா இரட்சிக்கப்படாது!

*இந்த சத்தியத்திற்கெல்லாம் மூல காரணமாய் இருக்கும் கிறிஸ்துவை கண்டடையும் வரை, நம் ஆத்துமா இரட்சிக்கப்படாது. கிறிஸ்துவை அறிந்துகொண்டவர்களை 'சத்தியம் அழைத்து' நம் இருதயத்திற்கும் ஜீவியத்திற்கும் பாதை உண்டாக்கித் தரும்! இவ்வாறு, ஆத்தும இரட்சிப்பை கண்டடையாதவர்கள், உண்மையற்ற நபராயும் உலக பரவசத்தில் நாட்டம் கொண்டவர்களாயும் தேவனைக் குறித்து எந்த காரியத்திலும் 'மேலோட்டமான' அக்கறையற்றவர்களாயும் இருப்பார்கள்! நிலைத்திராத இவ்வித நபர்கள் யாராயிருந்தாலும், தாங்கள் போதிக்கப்பட்ட தெய்வ உணர்வுகளுக்கு மாறாயிருப்பார்கள். அதாவது, மனுஷர்களுக்குரிய மனசாட்சியின் உணர்த்துதலைக்கூட புறம்பாக்கிப்போடுவார்கள்! இவர்கள் என்றென்றும் **'சத்திய ஆலயத்தின்'** வெளிப்புறத்தில் நிற்பவர்கள். இவர்கள், சத்தியத்திற்கு ராஜாவாகிய தேவனுக்கு முன்பாய் நிற்பதற்குரிய உரிமையை இழந்தவர்கள்!*

**"அன்பானவர்களே, கிறிஸ்துவிடம் திரும்பி வந்திட தீவிரம் அடையுங்கள். இந்த உலகத்தையும் அது வழங்கும் ஞான போதனையையும் உதறித் தள்ளுவதை "உங்களின் நிறைவான திருப்தி" என மகிழ்ந்திருங்கள். அப்படியில்லையென்றால் "நீங்கள் நாடிய உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாகவே காணப்படும்!**

மேலும் 'அவர்கள் கொண்டிருந்த உலக ஞான தந்திரத்தை வைத்தே' அவர்களைப் பிடிக்கிறார் அல்லது தீமையில் விழச் செய்கிறார்" (1கொரி.3:19) என்பதை அறிவோமாக. ஆகவே உங்களை முற்றிலும் கிறிஸ்துவை அறிவதற்கே ஒப்புக்கொடுப்பீர்களாக. ஏனெனில் அவரே நமது ஞானமும், அவரே நமது பரிசுத்தமும், அவரே நமது மீட்புமாயிருக்கிறார்! கிறிஸ்துவை அறிந்துகொண்ட யாவருக்கும் "அவரே சகல சத்தியத்திற்கும் ஊற்றுக்கண்ணாய்" மாறுகிறார்!

ஒரு ஆத்துமா இவ்வாறாக, இரவும் பகலும் அவரோடு தங்கி வாசமாயிருந்தால் 1) சத்தியத்தின் மீதுகொண்ட அன்பை இழக்காதவர்களாயும் 2) அவர்கள் எங்கு சென்றாலும், சத்தியத்தை நேசிப்பவர்களோடு ஐக்கியத்தை நாடுகிறவர்களாயும் இருப்பார்கள்.

*3) மேலும் தனக்கு போதித்த எல்லோரைக் காட்டிலும், மனுஷீக சிந்தையில் மூத்தவர்களாகிய யாரைக் காட்டிலும் ஞானமுள்ளவனாயும் இருப்பான்! அதற்கு ஒரே காரணம், சத்தியத்தை நேசித்து அதை கைக்கொண்டு வாழ்ந்திட்ட இரகசியமேயாகும் (சங்.119:99,100). கிறிஸ்துவை அறிந்துகொண்ட பாக்கியம்: அவரிடமிருந்து 'சத்திய வார்த்தையை' எப்போதும் பெற்றுக்கொண்டவனாயிருப்பான். ஏனெனில், தேவ ஞானம் அவனுக்குள் வேரூன்றி, அது அவனுக்கு தூய்மையான சுதந்திரமாய் மாறிவிட்டது! ஆமென்.*

*- F.B.மேயர்*

---

## 'கர்த்தரை நம்பி வாழும் விசுவாசத்தை' பகடி செய்வது குற்றம்!

*என் விசுவாச அறிக்கையும், சாட்சியும்*

*'உலகப் பொருட்கள்' நம் பயன்பாட்டிற்கு மாத்திரமே! அதுவே நமது தலைவனாய், பிரதானமாய், எஜமானாய், மாறிவிடக்கூடாது! "அதை வைத்து, ஆத்துமாக்களை (நண்பர்களை) ஆதாயம் செய்யுங்கள்! ஒருநாள் நாம் மரிக்கும்போது, உலகப்பொருட்கள் நம்மைக் கைவிடும்! ஆனால், நீங்கள் ஆதாயம் செய்த இவர்களோ 'நித்தியத்தில்' உங்களை வரவேற்பார்கள்!"(லூக்கா 16:9) என்றே இயேசு போதித்தார். உலகத்திலுள்ளவர்கள் "தன் இக்கட்டில்" பிறர் தங்களை ஆதரிக்க வேண்டுமென 'தம் போன்றவர்களிடத்தில்' ஞானமாய் நடந்து, தங்கள் சார்பில், அவர்கள் தங்களுக்குப்பட்ட கடனில் 50% எண்ணை கடனையும், இன்னொருவரிடத்தில் 20% கோதுமை கடனையும் மன்னிக்கிறார்களே, அதுகூட உங்களால் கூடாதா? என்றே இயேசு வியந்து கூறினார்! (லூக்கா 16:5-8). ஆகவே, உங்கள் பட்சத்தில் ஏற்பட்ட 'மனுஷர் குற்றங்களை' மன்னியுங்கள், என போதித்தார்! ஏனெனில், எஜமானுக்கு அவர்கள் பட்ட கடனை மன்னிப்பதற்கு அவனுக்கு உரிமையில்லை!*

*நீங்கள் இந்த ஒப்பற்ற 'பரலோக ஜீவனின்' வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், தேவனாகிய எஜமான்! உலகப்பொருளாகிய எஜமான்! என, இரண்டு எஜமான்களை வைத்துக்கொள்ளக்கூடாது! உலகப்பொருளாகிய "லோக அதிபதியை" வெறுங்கள்! அவனை புறக்கணியுங்கள்! அதற்கு மாறாக "தேவனை அன்புகூர்ந்து, அவரையே சார்ந்து கொள்ளுங்கள்" என்றே இயேசு அறைகூவல் விடுத்தார்!(16:13).*

**" இந்த சத்தியங்களை அடிப்படையாகக் கொண்டே பண விஷயத்தில் அது 'கொஞ்சமே ஆனாலும்' உங்கள் உண்மை சோதிக்கப்படுகிறது!**

**என இயேசு கூறினார். ஆனால், பணத்தை நம்பி, அதையே சார்ந்து வாழ்ந்த பரிசேயர், இயேசுவின் அறைகூவலை ஏளனம் செய்தனர்! எல்லாம் காரணம், அவர்களை இறுகப் பற்றியிருந்த "பொருளாசையே" என, இயேசு வெளியரங்கப்படுத்தினார்! (லூக்கா16:14).**

*பணத்தையும், உலகப்பொருளையும் நம்பி சார்ந்து கொண்டு, அதன்மீது பிடிப்புள்ள யாராயிருந்தாலும்,* **அவர்கள் 'பரிசுத்தம் பேசும்' பிரசங்கிகளாய் இருந்தாலும்,** *இந்த வசனம் எச்சரிக்கிறபடி, தேவனை மாத்திரமே 'எஜமானாய்' நம்பி வாழ்பவர்களை இவர்கள் 'கேலி' செய்வார்கள்! பணமே எங்கள் எஜமான், அதுவே எங்கள் தெய்வம்! இக்கால உலகில் பணமும் அவசியம், தேவனும் அவசியம்! என குந்தி குந்தி "இரண்டு எஜமான்களை" கைகோர்த்திட முயலும் மாந்தர்கள் யாராயிருந்தாலும் "அது ஒருக்காலும் கூடாது" என இயேசு அவர்களைப் பார்த்து உறுதிபட கூறிவிட்டார்!(லூக்கா 16:13).*

*வேத அறிஞர்களும், தலைமை ஆசாரிய குருக்களும், தங்கள் மனதில் காய்மாரமாக மறைத்து வைத்திருந்ததை, அச்சமயத்தில் அவர்களே வெளிப்படுத்தினார்கள்: "இதுவரை இயேசுவின் வாழ்விலும் ஊழியத்திலும் நடந்த அத்தனை நிகழ்வுகளும் 'அவரே முயற்சித்து' செய்துள்ளார்!" என்ற வஞ்சகமான குற்றச்சாட்டேயாகும்.*

**"அதாவது, தேவன் இவனுக்கு உதவி செய்யவில்லை" என்ற தங்கள் சொந்த அபிப்ராயத்தைக் கொண்டு, இயேசுவை எள்ளி நகையாடப் பயன்படுத்தினார்கள்!**

*இதற்கு ஒருபடி மேலாக* **"இப்போதும், உன் சொந்த பெலன் கொண்டு** *'சிலுவையை விட்டு இறங்கி உன்னை நீயே காப்பாற்றிக்கொள்' அப்போது 'அதைக் கண்டு' நம்புவோம்!" என்றெல்லாம், பொது அறிவு நடைமுறையை வைத்து, இயேசுவின் விசுவாசத்தைப் பகடி செய்யத் தொடங்கினார்கள்! (மாற்கு 15:30-32).*

*ஆனால், இயேசு சத்தமிட்டு கூவிய அற்புத வாசகம் என்ன தெரியுமா? "அன்றும், இன்றும், இப்போதுள்ள இந்த இக்கட்டு நேரத்திலும்* **'என் தேவனே என் தேவனே....'** *என்றே கூறி, சகலமும் பிதாவின் மீது கொண்ட விசுவாசத்தில் தன் ஜீவன், தன் ஊழியம் இயங்கியதை இயேசு தெளிவுபடுத்தி உரத்த சத்தமாய் அறிவித்தார்! (மாற்கு 15:34). ஆ, அதுவே நமது ஒப்பற்ற மாதிரியான இரட்சகர் இயேசு! குருவைப்போலவே, நாமும் மாதிரியாய் வாழ்ந்திட கர்த்தர் கிருபை செய்வாராக!*

*சுமார் 5- வருடங்களுக்கு முன்பு, கர்த்தரையே சார்ந்து வாழ்ந்து, ஊழியம் செய்த "என் தேவ விசுவாசம்" ஒரு ஸ்தாபன தலைவராலும், அவரோடு துணைநின்ற ஸ்தாபன மூப்பர்களாலும் 'பல்வேறு ரூபத்தில்' பகடி செய்யப்பட்டது! 'பணத்தை முன் வைத்து' பல்வேறு மிகைப்படுத்தலாலும், பொய்யுரையாலும் "கர்த்தர் மீது நான் கொண்டிருந்த தூய விசுவாசம்" நிந்தனை செய்யப்பட்டது! அதை மறுத்தோ, வாதித்தோ, வாக்குவாதம் செய்திட சிறிதளவும் என் ஆண்டவர் அனுமதிக்கவில்லை! ஆனால், விசுவாச நிந்தனை செய்தவர்கள் "விசுவாசிகளாய்" இருந்தபடியால், கீழ்கண்டபடி, என் விசுவாச நல் அறிக்கை செய்திட* **கர்த்தர் கட்டளையிட்டு,** *அதை அவர்களுக்கு எழுதி அனுப்பினேன்:*

*ஸ்தாபன தலைவர் அவர்களே, நீங்கள் என் மீது வாரி இறைத்திட்ட சேறுகள், என்னோடு நின்றுவிடாமல், என் ஜீவ காலமெல்லாம் எனக்குத் துணையாயிருந்து, என்னை உத்தமமாய் பாதுகாக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீதும் விழுந்ததை தங்களுக்கும், தங்களைச் சார்ந்த மூப்பர்களுக்கும், தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை!*

*எனக்கு நிந்தைகள் ஏற்படும்படி நீங்கள் செய்த முயற்சி, என் ஆண்டவர் மீதும் விழுந்தபடியால், அந்த நிந்தைகளைப் போக்குவதோடு "கர்த்தருக்கென்று விசுவாசத்தின் நல்ல அறிக்கையும், சாட்சியும்" கூற வேண்டியது என்னுடைய பொறுப்பாயிருக்கிறது:*

மார்ச் 1981-ம் ஆண்டு 23-ம் தேதி முழு நேர ஊழியத்திற்கு தேவனுடைய அழைப்பை பெற்ற நான், என் பெற்றோர்களின் வீட்டை விட்டு வெளியேறினேன். பூமிக்குரிய என் தகப்பன் வீட்டில் வசதியாகவும், பல்வேறு ரூபத்தில் செல்வந்தமாயும் வாழ்ந்து வந்தேன். ஆனால், அவ்வித ஜீவியத்தை நான் உதறிவிட்டு என் மனைவியோடும், என் முதல் பத்துமாத மகளோடும் வெளியேறிய போது, என் பையில் யாதொரு பணமும் இல்லை. ஆனால், அன்று முதல் இன்று வரை, என் தேவனாகிய கர்த்தர் மகா உண்மையுள்ளவராயிருந்து என்னை எல்லாவிதத்திலும் அன்புடன் போஷித்து வருகிறார்! தேவனுக்குரிய இந்த புகழ்ச்சியும், அவரது உத்தமத்தின் மகத்துவத்தையும், இந்த உலகத்திலுள்ள ஒரு மனிதனாலும் பறித்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், ஒரு ரூபாய் பணம்கூட என் சொந்த ஆறு சகோதரிகளிடமோ அல்லது அவர்கள் குடும்பத்தாரிடமோ அல்லது என் மனைவியின் சகோதரிகளுடைய குடும்பத்தாரிடமோ நான் கேட்டதும் இல்லை, எதிர்பார்த்ததும் இல்லை. என் ஆரம்ப 4- வருட முழு நேர ஊழியத்தில் (1981-1984), நற்குணசாலியான பாஸ்டர். *ஜோசப் பாலசந்திரன்* அவர்களிடம் கூட கேட்டதும் இல்லை, எதிர்பார்த்ததும் இல்லை. நான் கர்த்தருக்கு உண்மையும், உத்தமுமாய்

ஊழியம் செய்துவரும் மதுரை ஸ்தல சபையிடமோ, அல்லது அங்கிருந்த சபை மக்களிடமோ, அல்லது உங்கள் ஸ்தாபன தலைமை பெங்களூரிலிருந்தோ அல்லது இந்த உலகத்திலுள்ள யாதொரு நபரிடமிருந்தோ நான் கேட்டு வாங்கினதுமில்லை, எதிர்பார்த்ததுமில்லை! இது, கர்த்தருக்கு முன்பாக வாழ்ந்து, ஊழியம் செய்த தூய்மையான மனசாட்சியின்படியான, எனது சாட்சியாயிருக்கிறது.

இவ்வாறு, யாதொரு மனிதனிடமும் பணம் பெறுவதற்காக அல்லது அவர்களின் யாதொரு ஆதரவையும் பெறுவதற்காக, என் தேவைகளைச் சொல்லாதபடியால் 'ஓர் அரசகுமாரனைப்போல்' கர்த்தருடைய கரத்தில் வாழ்ந்து வருகிறேன். கடந்த 44 ஆண்டுகளாய், என் ஆண்டவர் மீது கொண்ட அன்பினாலும், தேவ அழைப்பின் நன்றியாலும் முழு நேர தேவ ஊழியனாய் இன்றுவரை பக்தியுடன் வாழ்ந்து ஊழியம் செய்து வருகிறேன்! அதனிமித்தம், முற்றிலும் இலவசமாகவே நன்றி ஊழியம் செய்து வருகிறேன். இன்று வரை, எந்தவொரு மனிதரிடமோ, யாருடைய சம்பள ஒப்பந்தத்தின்படியோ அல்லது என் ஜீவனத்திற்காக மாதாமாதம் ஆதரவாளர்களைக் கொண்டோ இன்று வரை வாழவில்லை. இந்த உலகில் யாராவது "நான் ரத்தினகுமாரை போஷித்தேன் அல்லது நான் அவருக்கு சம்பளம் கொடுத்தேன்" என கூறினால், அது என்னை, மிகுந்த அக்கறையோடு இன்று வரை உத்தமமாய் போஷித்து வரும் என் அன்பின் பிதாவிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய நிந்தையாகும். மெய்யாகவே இவ்வித செயல், என் ஆண்டவருடைய உத்தமத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய நிந்தையாயிருக்கிறது. தேவன் மீது விழுந்த இந்த நிந்தை உங்களுக்கும், உங்களை சார்ந்த மூப்பர்களுக்கும், தேவனுக்கு முன்பாக சம்பவித்த காரியமாயிருக்கிறது. அது எனக்கு அல்ல! எனவே இதுகுறித்து யாதொரு பதிலும் எனக்கு நீங்கள் எழுத வேண்டிய அவசியமில்லை! தேவனிடம் ஒப்புரவாகுங்கள்! அதுபோதும், என்று எழுதினேன்.

*இக்கடிதம் எழுதி, சுமார் 5-வருடங்கள் கடந்தாலும், இன்றுவரை பதில் இல்லை. என்றாவது ஒருநாள் தேவனிடம் ஒப்புரவாகி விடுவார்கள் என்றே நம்புகிறேன்! கடைசி வரியாக, நான் குறிப்பிட்டது என்னவெனில், "கர்த்தருடைய வருகையில், தேவனுடைய பூரண வெளிச்சத்தில் என் ஆண்டவருக்கு முன்பாக நான் குற்றமில்லாது வாழ்வதையும், என் ஜீவியத்திலும், கர்த்தருக்கு நான் செய்து வரும் ஊழியத்திலும் 'என் மனசாட்சியில் கறைபடாதவன்' என்பதையும், அந்நாளில் கர்த்தர் விளங்கச் செய்வார்! அந்த நாள், வெகு சீக்கிரத்தில் சம்பவிக்க இருப்பதையும் நான் ஆவியில் அறிந்திருக்கிறேன்!" என என் விசுவாச அறிக்கையை சாட்சியாக கூறி, கடிதத்தை முடித்தேன்!*

*நம் அனைவருக்கும் "விசுவாசத்திற்குரிய நல்ல போராட்டம்" உண்டு என்பதை உணர்ந்து, நமக்கு ஒப்புவிக்கப்பட்ட "விசுவாசத்தைக் காத்து வாழ்ந்திட" கர்த்தர் கிருபை செய்வாராக! (2தீமோ.4:7), ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*

"தேவப் பிதா... மேய்ப்பனல்லோ" கவி பாடியவர்!

# ஜோசப் – கவிராயர்!



தேவப் பிதா எந்தன் மேய்ப்பனல்லோ, பாடலை எழுதியவர் யோசேப்பு கவிராயர்! அவர், கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூரில் ஜுலை 1841-ம் ஆண்டு பிறந்தார். மக்களால் அன்புடன் 'கவிராயர்' போதகர் என அழைக்கப்பட்டார்!

தன் இளமைப் பருவத்திலே, தன் உடன் பிறந்தோரையும், தன் தந்தையையும் இழந்து, நிர்க்கதியற்ற பின்பு, தன் தாயையும் இழந்து, அனாதையானார்! இந்நிலையில் அவர் வாலிபனாயிருந்த காலம் தொடங்கி, தன் பரமண்டல பிதாவையே நம்பி வாழ்ந்தார்! வாலிப யோசேப்பு, அவரை உரிமையோடு, "தேவப் பிதா" என அழைத்து, "தேவப் பிதா, எந்தன் மேய்ப்பனல்லோ!" என்ற பாடலை மனதுருகிப்பாடி, எழுதினார்!

கொல்லிமலை மிஷனெரி என அழைக்கப்படும் ஆங்கிலேய மிஷனெரியான ஜெசிமன் பிராண்ட் அவர்கள், ஊழியத்தின் பாதையில் தமிழை கற்றுக்கொண்ட பிறகு, இந்த "தேவப் பிதா...." என்ற பாடல், அவருக்கு மிகவும் பிடித்த பாடலாக மாறியது! ஆங்கிலத்தில் உள்ள பாடல்களைக் காட்டிலும், தமிழில் உள்ள "தேவப் பிதா" என்ற இப்பாடலே ஜெசிமனை அதிகமாக கவர்ந்தது!

தனது 43-வது வயதிலேயே 'ஜெசிமன்' கொல்லிமலையின் விஷக்காய்ச்சலால் மரித்தபோது, அவர் அடிக்கடி விரும்பிப் பாடிய இப்பாடலையே அவரது அடக்க ஆராதனையில், அந்த கொல்லிமலை மக்கள் கெம்பீரமாய் பாடினார்கள். இவ்வாறு வெளிநாட்டு தேவ ஊழியர்களையும் கவர்ந்த இப்பாடல், கிட்டதட்ட இந்தியாவின் அனைத்து முக்கிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பாடப்பட்டு வருகிறது!

இன்றும், இந்தியாவின் வட மாநிலங்களில் நடைபெறும் மிஷனெரி பணிகளில், பல ஆதிவாசி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பாடப்படும் முதல் பாடலாக இப்பாடல் விளங்குகிறது. தமிழகத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் கீர்த்தனைகளில், இப்பாடல் மிகச்சிறந்ததாக கணிக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் முக்கியத்துவம் என்னவெனில், இதன் அடிப்படையான 23-ம் சங்கீதம்: 1) திருமணம் போன்ற சந்தோஷ நிகழ்ச்சிகளில் தேவ அருளை பெற வேண்டி பாடுவதற்கும், 2) திகிலுள்ள வேளைகளில் அடைக்கலப் பாடலாக பாடுவதற்கும், 3) துயருற்று கலங்கி நிற்கும் வேளைகளிலும், 4) அருமை யானவர்களை இழந்து தவிக்கும் வேளைகளிலும், ஆறுதல் பெற பாடுவதற்கும் ஏற்ற, தகுதி நிறைந்த உள்ளங்கவர்ந்த பாடலாய் இன்றும் விளங்குகிறது! இத்தனை அருமையான 'கவிராயர்' போதகர் தனது 46-வது வயதில் தன் 'தேவபிதாவிடம்' அடைக்கலமானார்!

- நிரூபித்து வாழும் கிறிஸ்துவின் தாசர்கள்

## எந்த மனுஷனுமல்ல, எல்லா உதவிக்கும் கர்த்தரையே நோக்குங்கள்!

யார் யார் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமாகப் பாதுகாத்துக்கொள்வார்களோ, யார் யார் தங்களை முற்றுமாக கர்த்தருக்கு ஒப்புவித்து அவரை மாத்திரம் உலகோர்க்கு உயர்த்தி காண்பிக்க வைராக்கியம் கொள்வார்களோ, யார் யார் பண ஆசை இல்லாதவர்களாகவும், மக்களுடைய புகழ் ஆரவாரம் ஆர்ப்பரிப்புகளை சற்றும் கண்டு கொள்ளாமலும், தங்களைக் கர்த்தருக்குள் மறைத்து தேவ மைந்தனின் சிலுவையை மட்டும் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்திக் காண்பிக்கிறார்களோ, அந்த மக்களை அவர் இன்றும் தமது கரத்தின் கருவியாக எடுத்து ஆச்சரியவிதமாக பயன்படுத்த வல்ல தேவனாக இருக்கின்றார்! தெய்வம் 'ஒருவனை நம்பி' அவனைத் தன் பணியில் வைத்திருப்பது, சொல்லி முடியா பாக்கியம்!

இவ்வாறு, கர்த்தரையே நம்பி வாழ்ந்த ஜியார்ஜ் முல்லர் என்ற தேவ ஊழியன் தனது ஊழியத்தின் தேவைகளை நாசியில் சுவாசமுள்ள எந்த ஒரு மனுஷனுக்கும் மறைமுகமாகவோ, அல்லது நேரிடையாகவோ கூறி, அறிவித்து, தனது தேவைகளைப் பூர்த்தி செய்கிறவராக இராமல், கர்த்தர் ஒருவருக்கே மட்டும் தனது தேவைகளைக் கூறி, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடமிருந்து அற்புதமாக ஒத்தாசையைப் பெற்றுக்கொண்டார்!

கர்த்தர் அவரை நம்பி ஒப்புவித்த 'அனாதை இல்லத்தை' சிறு குறையும் ஏற்படாமல் நடத்தியதெல்லாம் "கர்த்தாவின் ஒத்தாசை" மாத்திரமேயாகும்! அதற்காக அவர் செய்ய வேண்டியதாயிருந்ததெல்லாம், தன் ஆண்டவருடைய பாதங்களில் எப்பொழுதும் ஜெபத்தில் தரித்திருந்து ஒத்தாசையின் பர்வதத்தை நோக்கிக் கொண்டிருப்பதுதான். ஆம் "அவன் தன்னை உண்டாக்கினவரையே நோக்குவான், அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக் கொண்டிருக்கும்" (ஏசாயா 17:8) என்ற வேதவாக்கியம் நிறைவேறிட, ஓ வாலிபனே இந்த நல்ல காலத்தில், உன் இளமையை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவரையே நம்பி வாழ்ந்து சுகித்திருப்பாயாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**